06.08.2025

O.S.No.49/2012

**பி.வா.சா.1.திரு.சுந்தரசாமி த.பெ.கார்மேகம்.**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் மேலூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலராக 06.08.2024ம் தேதி பொறுப்பு எடுத்துக் கொண்டேன். வாதி வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்ற விவரம் படித்து தெரிந்து கொண்டேன். வாதி வழக்கில் எந்த கிராமத்தில் எந்த சர்வே எண்ணில் சொத்து உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் கல்லம்பட்டி கிராமத்தில் சர்வே எண்.318/24 மற்றும் சர்வே எண்.318/28–என்று குறிப்பிட்டுள்ளார். வழக்குச் சொத்து விவரத்தில் காம்பவுண்ட் சுவரும் சேர்த்து குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தின் வடக்கு மால் என்ன என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்குரையில் வடக்கு மாலாக சர்வே எண்.318/23–ல் உள்ள மந்தைவீரன், ம.கோட்டைவீரன், சின்னனன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிழக்கு சர்வே எண்.318/28–ல் உள்ள காலியிடம் என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தெற்கே சர்வே எண்.318/25–ல் வீ. கோட்டைவீரன் என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கே காலியிடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. எனது நிரூபண வாக்குமூலத்தில் அலுவலகத்தில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேலும், 1, 3, 5, 6 ஆகிய பிரதிவாதிகளுக்காகவும் சேர்த்து சாட்சியம் அளிப்பதாக

சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஊராட்சி மன்ற தலைவர் என்ற பதவி 5 ஆண்டுகளுக்கு தான் என்றால் சரிதான். ஊராட்சி மன்ற தலைவர் பதவி இல்லாததால் நான் தான் தற்போது தனி அலுவலராக இருந்து வருகிறேன். ஊராட்சி மன்ற தலைவர் பதவி இல்லாததால் நான் தனி அலுவலராக இருந்து வருகிறேன் என்ற விவரத்தை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. நிரூபண வாக்குமூலத்தில் கல்லம்பட்டி கிராமம் புல எண்.318/24–என்பது கிராம கணக்குகளின்படி, 00.17.0 ஹெக்டேர் ஏர்ஸ் நிலமானது வீ. மலையாண்டி பெயரில் மனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது சர்வே எண்.318/24–ல் வீடு இல்லை கல்லுக்கால் மற்றும் ஊன்றப்பட்ட நிலையில் உள்ளது என்று சொல்லியுள்ளது சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கல்லுக்கால் ஊன்றப்பட்டு உள்ளதாக நீதிமன்றத்தில் உள்ள ஆவணங்களில் உள்ளதா என்றால் இல்லை. எதனடிப்படையில் நான் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான் சர்வேயர், கிராம நிர்வாக அதிகாரி, ஊராட்சி செயலர் ஆகியோர்கள் அந்த இடத்திற்கு சென்று பார்வையிட்டதன் அடிப்படையில் நான் அவ்வாறு குறிப்பிட்டேன். எந்த தேதியில் நான் சென்று பார்த்தேன் என்ற விவரம் எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

4. எனது நிரூபண வாக்குமூலத்தில் சர்வே எண்.318/28–என்பது கிராம கணக்குகளின்படி, 00.33.0 ஹெக்டேர் ஏர்ஸ் நிலமானது சர்க்கார் புறம்போக்கு சந்து என்று குறிப்பிடப்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி, சந்து கிழமேல் சந்தா, தென்வடல் சந்தா, என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் குறிப்பிடவில்லை என்றால்

சரிதான். இரண்டு வீடுகளுக்கு நடுவே உள்ள சந்து என்பது அந்த சந்தை ஓட்டி உள்ள நபர்கள் புழங்குவதற்கான இடம் என்றால் அரசு புறம்பபோக்கு என்பதால் அனைவரும் புழங்கிக் கொள்ளும் இடம் ஆகும்.

5. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில், சந்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது எத்தனை அடி நீளம், எத்தனை அடி அகலம் என்று சொல்ல முடியுமா என்றால் இயலாது. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில், 05.07.2024ம் தேதி வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில், வழக்கு சொத்தை தனியாக குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரிதான். வாதி தாவா சொத்தில் காம்பவுண்ட் சுவர் உள்ளதாக சொல்லும்பட்சத்தில் சர்வே எண்.318/28–ல் காம்பவுண்ட் சுவர் உள்ளது என்று கூறும் வகைக்காக ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6. பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக வாதி ஆக்கிரமித்து காம்பவுண்ட் சுவர் எழுப்பியுள்ளார் என்று நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது சம்பந்தமாக பொது மக்கள் யாரேனும் புகார் கொடுத்துள்ளார்களா என்றால் வழக்கு உள்ளதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன். வாதி 35 ஆண்டுகளுக்கு முன்பாகவே அந்த காம்பவுண்ட் சுவர் கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. கடந்த 24.01.2012ம் தேதி மேலூர் வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி. வெ. குப்புமணி என்பவர் பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் சர்வே எண் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.318/3–என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5 ஆவணத்தின்படி, அறிவிப்பு தாவா சொத்திற்கு கொடுக்கப்பட்டது அல்ல என்றால் சரிதான். சர்வே எண் வேறு தான் உள்ளது.

7. எனக்கு முன்பாக வட்டார வளர்ச்சி அலுவலராக திரு. சங்கர் கைலாசம், திரு. கதிரவன், திருமதி. சுமதி ஆகியோர்கள் பணிபுரிந்தார்கள் என்றால் திரு. சங்கர் கைலாசம், திரு. கதிரவன் ஆகியோர்கள் பணிபுரிந்தார்கள். திருமதி. சுமதி என்பவர் பணிபுரிந்தாரா அல்லது அவரது கணவர் திரு. ஜனார்த்தனன் பணிபுரிந்தாரா என்று எனக்கு ஞாபகமில்லை. எனக்கு முன்பாக பணிபுரிந்த வட்டார வளர்ச்சி அலுவலர்கள் யாரும் ஆவணங்களின்படி, தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு இருந்ததாக குறிப்பு எழுதி வைத்திருந்தார்களா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக ஆவணங்கள எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 35 ஆண்டுகளாக தாவா சொத்தில் காம்பவுண்ட் சுவர் கட்டி அனுபவித்து வந்தார் என்றாலும், வழக்கு தாக்கல் செய்யப்பட்டபின்பு 13 ஆண்டுகளாக அனுபவித்து வந்தார் என்றாலும், காம்பவுண்ட் சுவர் எந்த ஆவணமும் கிடையாது. தாவா சொத்தான சர்வே எண்.318/28–க்கு மேற்குப் பக்கம் சுமார் 15 அடி ரோடு செல்கிறது என்றால் 15 அடிக்குள் இருக்கும். அந்த ரோட்டிலிருந்து சர்வே எண்.318/28–க்கு வருவதற்கான ஆவணங்கள் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனவே, வாதி வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக் கூடியதல்ல என்றால் சரியல்ல.

<u>7 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

8. வாதியின் சொத்து சர்வே எண்.318/24–ல் உள்ள 17 சதுர மீட்டர் அளவுள்ள சொத்து என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்.318/24– முதலாம் இலக்கச் சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குரையில் காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.318/28–

என்பது பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி, சர்க்கார் புறம்போக்கு சந்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் 7 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்கோருரிமை தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்குரையில் சர்வே எண்.318/24– சொத்தில் காம்பவுண்ட் சுவர் உள்ளதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். வாதி சொல்லும் காம்பவுண்ட் சுவர் காலோபிளாக்கால் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9. பொதுவாக, சந்து என வகைப்பாடு செய்யப்பட்ட சொத்தானது பொது மக்கள் பயன்பாட்டிற்கானது என்று தான் கருத முடியும் என்றால் சரிதான். வாதி சர்வே எண்.318/28ல் காம்பவுண்ட் சுவர் கட்டியுள்ளரா, சர்வே எண்.318/24–ல் கட்டியுள்ளரா என்றால் சர்வே எண்.318/28–ல் கட்டியுள்ளார். பொது சந்து சம்பந்தமாக ஏற்கனவே, வருவாய் நீதிமன்றத்தில் தாவா இருந்து வந்தது என்றால் தெரியாது. சர்வே எண்.318–ல் உள்ள சர்வே எண்கள்.318/16 முதல் 318/28–வரை உள்ள உட்பிரிவுகள் தாய் புலத்திலிருந்து பிரிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் புல அமைப்பு தெரியுமா என்றால் தெரியும். கல்லம்பட்டியில் உள்ள பிரதான சாலை சர்வே எண். 316/1ல் உள்ள கிழமேல் சாலை என்றால் பிரதான சாலை உள்ளது சர்வே எண் தெரியாது. பிரதான சாலைக்கு இணைவாக தான் சர்வே எண். 318/28–ல் உள்ள சந்தும், சர்வே எண். 318/22ல் உள்ள பாதையும் அமைந்துள்ளது என்றால் சர்வே எண்.318/28–ல் உள்ள சந்து இணைவாக உள்ளது என்பது சரிதான். சர்வே எண். 318/22யைப் பொறுத்து எனக்கு தெரியாது.

**(4ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் யாரும் முன்னிலையாகவில்லை. 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக 11.08.2025ம் தேதி மதியம் 03.00 மணிக்கு இந்த வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/–
(திரு. P. மகாராஜன், M.L)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.